**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : CC.No.218/2020**
**வழக்கு சாட்சி PW-5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஹபிபுல்லா | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | முகமது யூசுப் | தொழில் | : | உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| கிராமம் | : | செங்கோட்டை | வயது | : | 65 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Tuesday of 14.07.2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தமிழ்நாடு காவல்துறையில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது செங்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் பாவூர்சத்திரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, காவல் நிலைய குற்றஎண்.169/2017 வழக்கினை என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு,

09.05.2017 அன்று 16.30 மணியளவில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் ராஜசேகர் மற்றும் ராமர் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.4** ஆகும். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5** ஆகும். பின்னர், சாட்சிகள் காந்திசெல்வன், குப்புசாமி, நாகூர், ராஜசேகர், ராமராஜ் மற்றும் தலைமைக்காவலர் ஆரோக்கியமேரி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

எதிரி முன்பிணை பெற்றதால் அவரை கைது செய்யவில்லை.

பின்னர், காயம்பட்ட காந்திசெல்வன் என்பவருக்கு சிகிச்சை அளித்த தென்காசி அரசு மருத்துவர்.புரோஸ்கான் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன். அத்துடன் எனது விசாரணையை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 324, 506(2) இதச–வின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

அ.சா.1 புகார் வாக்குமூலத்தில் நாங்கள் முற்றிலும் வேலியிட்டு, இரும்பு கதவுகள் கொண்டு பராமரித்து வரும் குஷி வாட்டர்பார்க் வழியாக என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். குஷி வாட்டர்பார்க்கின் நுழைவு வாசலா? அல்லது அலுவலகம் பக்கமா? என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 12 நபர்கள் வாழை மரங்களை வெட்டி சென்றதாக கூறியுள்ளவர்கள் யார் என விசாரணையில் துலங்காது என்றால் சரிதான். சாவியை ஒப்படைத்த பெரியவர்கள் யாரென்று அ.சா.1 என்னுடைய விசாரணையில் சொல்லவில்லை.

80 நபர்கள் யாரென்று என்னுடைய விசாரணையில் சொல்லவில்லை. அ.சா.1 ன் விபத்து பதிவேட்டில் தன்னை தெரிந்த ஒரு நபரும், அடையாளம் தெரியாத 4 நபர்களும் தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 09.05.2017 அன்று 10.00 மணிக்கு சம்பவம் நடந்ததாக விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பார்வை மகஜரில் வீட்டின் முன்பு வைத்து சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

குஷி வாட்டர்பார்க் தென்காசி –திருநெல்வேலி சாலையில் வடபுறம் இரயில்வே கிராஸிங் கடந்து உள்ளது என்றால் சரிதான். இரயில்வே கிராஸிங் பகுதி குற்றாலம் காவல்நிலைய எல்கைக்குட்பட்டது என்றால்

சரிதான். அ.சா.1 கிரசர் யுனிட் நடத்தி வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. அ.சா.1ன் மீது எங்களுடைய காவல்நிலையத்தில் மாரியப்பன் என்பவர் கொடுத்த புகார் மீது குற்ற எண்.168/2017 என பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். சான்று பொருட்கள் எதுவும் நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான்.

அ.சா.1 ன் மீது வழக்கு பதிவு செய்யப்பட்ட விபரம் தெரிந்து அந்த வழக்கை திசை திருப்பும் நோக்கில் அ.சா.1ன் மீது பொய்யாக நடக்காத சம்பவத்தை நடந்ததாக கூறி ஒரு பொய் புகார் கொடுத்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்றால் சரியல்ல. விபத்து பதிவேட்டில் அ.சா.1, 108 ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆம்புலன்ஸ் டிரைவரை நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் குப்புசாமி, நாகூர் ஆகியோர்கள் மருத்துவமனையில் சேர்த்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

நான் சொன்ன நாள், நேரத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.16 13:07:42 +0530